பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

14 MAR 2001

# வலம்புரி
# VALAMPURI

மங்கையரின் அழகுக்கு
மேலும் அழகூட்டும்
தங்க நகைகளை 22கரட்டில்
பெற்றிட இன்றே நாடுங்கள்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1574)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 1 புதன்கிழமை 14-03-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 85

### யாழ். மாநகரசபையில் ★ நிர்வாகச் சீர்கேடு ★ பழிவாங்கல்

## 26 கு.ந. உதவியாளர்களின் சம்பளம் நிறுத்தம்
## சிகிச்சை நிலையங்கள் முற்றாக ஸ்தம்பிதம்

யாழ்ப்பாண மாநகரசபையின் குடும்பநல உதவியாளர்கள் 26 பேருக்குச் சம்பளம் வழங்காமல் இடைநிறுத்தி வைத்திருப்பதனால் அவர்கள் தொடர்ந்தும் பணியாற்ற முடியாத நிலையில் மாநகர சபைக்குட்பட்ட சகல சிகிச்சை நிலையங்களும் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த சிலவாரங்களுக்கு முன்னர் யாழ் மாநகரசபையின் சுகாதாரப்பகுதி ஊழியர்கள் பல கோரிக்கைகளை முன் வைத்து தமது சேவை பாதிக்காத வகையில் நடத்திய கறுப்புப் பட்டிப் போராட்டத்திற்குப்பழிவாங்கும் நடவடிக்கையாகவே இச் சம்பளக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தொழிற்சங்கப் பிரதிநிதியொருவர்தெரிவித்துள்ளார்.

சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததனாலும், சுகாதார ஊழியர்களுக்கு பொருத்தமற்ற உள்ளக இடமாற்றங்களை மேற்கொண்டதனாலுமே குழந்தைகள், மற்றும் கர்ப்பவதிகளின் சிகிச்சை நிலையங்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதிஆர்.தெய்வேந்திரனுடன்நேற்றிரவு தொலைபேசி

→ 8ஆம் பக்கம் பார்க்க

### அனுமதி வேண்டும்

(வவுனியா)

வவுனியா நகரில் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதெனில் அது குறித்து இராணுவத்தினருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவேண்டுமென வவுனியாமாவட்டஇராணுவ இணைப்பதிகாரி மகேஸ்சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியாக் கட்டளைத் தலைமையகத்தில் வவுனியாவிலுள்ள தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளை அழைத்த இராணுவஇணைப்பதிகாரி ஆயுதத்துடன் நடமாடுவது குறித்து இராணுவத்தினருக்கு முன் கூட்டியே தெரியப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். (ந-4)

### ★ வவுனியா கல்வியியல் கல்லூரியில்

# சிங்கள-தமிழ் மாணவர்கள் மோதல்

# எட்டுப் பேர் காயம்; இருவர் தமிழர்

### விடுதிமேற்பார்வையாளரும் தாக்கப்பட்டார்

(வவுனியாநிருபர் ரி. விவேகராசா)

**வவுனியா கல்வியியல் கல்லூரியில் பகிடிவதை தொடர்பாக சிங்கள, தமிழ் மாணவர்களுக்குகிடையே நேற்று முன்தினம் நள்ளிரவுஒரு மணியளவில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் எட்டு மாணவர்கள் காயமடைந்த நிலையில்அநுராதபுரம்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் காயமடைந்த எட்டு மாணவர்களில் ஆறு பேர்சிங்களமாணவர்கள்,இரண்டுபேர்தமிழ்மாணவர்கள்.**

வவுனியா கல்வியியல் கல்லூரியில் 2ம்வருட மாணவர்கள் முதலாம் வருட மாணவர்கள் மீது பகிடிவதையில் ஈடுபட்டதைத் தொடர்ந்தே இம்மோதல் சம்பவம் ஏற்பட்டது.

பகிடிவதைக்கு ஆதரவாக செயற்பட்ட 2ம்வருட சிங்கள மாணவர்களுக்கும், பகிடிவதைக்கு எதிராகச் செயற்பட்ட தமிழ் மாணவர்களுக்குமிடையே நேற்று நள்ளிரவுக்குப்பின் இடம் பெற்ற

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 400ரூ.சம்பளஉயர்வு;இல்லாவிடில் அமைச்சர் பதவி ராஜினாமா

### ஆறுமுகம் தொண்டமான் எச்சரிக்கை!

(நமது நிருபர்)

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் 400 ரூபா சம்பள உயர்வு குறித்து 17ம் திகதிக்குள் முடிவு எதனையும் அரசு அறிவிக்காது போனால் அமைச்சர் பதவியில் இருந்து விலகப் போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் அரசிற்கு எச்சரித்துள்ளார். இந்த எச்சரிக்கையை அடுத்துஆறுமுகம்தொண்டமான்அமைச்சர் மங்களசமரவீராவைச்சந்தித்து தனது முடிவினைத் தெரிவித்துள்ளார். இதனை செவிமடுத்த அமைச்சர் மங்களசமரவீர சில தினங்களில் இவ் விடயம் தொடர்பாக தான் ஜனா (8ம் பக்கம் பார்க்க)

### செம்மணிப் புதைகுழியுடன் சம்பந்தப்பட்ட

## பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வெளிநாட்டுக்கு 'தப்பி சென்றுவிட்டார்

(கொழும்பு)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஐவரும் நேற்றுகொழும்பு நீதிமன்ற பிரதம நீதியரசர் ஹெய்யத் கொட்டுவ முன் நிலையில் ஆஜராயினர்.

நேற்று செம்மணிப் புதைகுழி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபர்களான எல். எவ். ஜி. லலித் சுசிந்தகுமார, வை. ஜீ அத்துல உதயகுமார, பி. ஜி. சமரவிக்கிரம, வை. ஜி. பி. சகிந்த பெரேரா மற்றும் எஸ். விஜய செனவிரத்ன, ஆகிய இராணுவச் சிப்பாய்களே நீதிமன்றில் ஆஜராகினர். எனினும் ஆறாவது

→ 8ஆம் பக்கம் பார்க்க

### தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் மீட்பு; 4 பேர் கைது

(கொழும்பு)

தெஹிவளைப் பகுதியில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் தற்கொலை அங்கிகளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளை பொலிஸ்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### யாழ் - கொழும்பு தொலைபேசி இணைப்பு பெறுவதில் பெரும் சிரமம்

[யாழ்ப்பாணம்]

கடந்த சில நாட்களாக கொழும்புக்கும்யாழ்ப்பாணத்துக்கும்இடையிலானதொலைபேசி இணைப்புப் பெறுவதில் பலசிரமங்களை தொலைபேசி பாவனையாளர்கள் எதிர்நோக்குகின்றனர்.

தொலைபேசி அழைப்புக்களை பெறுவதில்உள்ளகாலதாமதம், தாமதமாகிஅழைப்புக் கிடைத்தாலும் நிமிடத்துக்கு நிமிடம் 'கட்' ஆவதும் தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு விசனத்தைஅளித்துள்ளது.

இது தொடர்பாக யாழ் ரெலிக்கொம் அதிகாரிஒருவருடன் தொடர்பு கொண்ட

→ 8ஆம் பக்கம் பார்க்க

### தமிழர்களுக்குத் தனி நாடென்ற பேச்சுக்கு என்றுமே இடமில்லை!

(லண்டன்)

நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறும், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகள் துரித முன்னேற்ற மடைந்து வருவதனால், தமிழர் பிரச்சினை குறித்த தீர்வு நெருங்கி வருகிறது.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க நேற்று ஜேர்மனிய வர்த்தகர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜேர்மனியில் தங்கி

→ 8ஆம் பக்கம் பார்க்க

### டாக்டர்கள் நேற்று வேலைநிறுத்தம் வைத்தியசேவைகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர்கள் நேற்று நடாத்திய அடையாள வேலை நிறுத்தத்தினால் யாழ். போதனா வைத்திய சாலையின் வைத்திய சேவைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தது. (8-ம் பக்கப் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புகையிலைக்கான விலை அதிகரிப்பு செய்கையாளர் திருப்தி

[இணுவில்]

குப்பிளான், புன்னாலைக் கட்டுவன் பகுதிகளில் அறுவடைசெய்யும் நிலையிலுள்ள புகையிலைக் கன்றுகள் ஒவ்வொன்றும் 50 ரூபா தொடக்கம் 80ரூபா வரை விற்பனையாகிறது.

புகையிலைக் கன்றுகளை பெற்றுக்கொள்ளும் வகையில் இணுவில், கோண்டாவில் பகுதி வர்த்தகர்கள் பெருமளவில் இப்பகுதியை நாடிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

(உ-49)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

திருமறைக் கலாமன்ற கிறுவர் கலைக்கூட இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மன்ற இயக்குநர்மரியசேவியர் அடிகள் தலைமையில் மன்ற மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகத் தீவகக் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் செல்லையா மெற்றாஸ்மயிலும், சிறப்பு விருந்தினராக கப்டன்டி. ஏ. எம். குணசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ- 106)

# போஷாக்கு வார கட்டுரைப் போட்டி

(இணுவில்)

தேசிய போஷாக்கு வாரத்தையொட்டி வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

பிரிவு 1க்கு போஷாக்கும் நாமும், பிரிவு2 க்கு உடல் ஆரோக்கியத்தில் போஷாக்குணவின் பங்கு பிரிவு 3 ற்கு உயிர்ச் சத்து ஏவாழ்வின் ஒளி எனும் தலைப்பில் கட்டுரைப் போட்டி இடம்பெறும்.

இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 16 ஆம் திகதியாகும்.

வலய மட்டப் போட்டிகள் வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30க்கு யா/இராமநாதன் கல்லூரியில் இடம்பெறும்.

[உ-49]

# நல்லூர் பிரதேச சபை இதய அஞ்சலி

வலி.தெற்கு பிரதேச செயலாளரும், நல்லூர் பதில் பிரதேச செயலாளரும் எமது பிரதேச வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவரும் பிரதேச சபையின் முன்னாள் விஷேட ஆணையாளருமாகிய

## அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம் அன்னாரின் பிரிவால் கலங்கி நிற்கும் குடும்பத்தாரின் துயரில் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா ஈசன் பாதத்தில் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்,

**தலைவர், உறுப்பினர்கள்,**
**செயலாளர், உத்தியோகத்தர்கள்,**
**ஊழியர்கள்.**

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி.

(கி-1595)

# சோதனை தீவிரம்

(அரியாலை)

மக்கள் மீளக்குடியமர்ந்த அரியாலைப் பகுதி வீதிகளில் தற்போது இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

நேற்றுக்காலையும் நாவலர் வீதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்பாக இராணுவத்தினர் சோதனையில் ஈடுபட்டனர்

இதன்போது பொதுமக்களின் அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டன.

(உ-106)

# 'கோல்லைன்' புதிய இன கோழிக் குஞ்சு விற்பனை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கோழிப் பண்ணையில் வளர்த்தெடுக்கப்பட்ட ''கோல் லைன்'' புதிய இன ஒருநாள் கோழிக் குஞ்சுகள் கடந்தவாரம் முதல் யா/கால் நடை வைத்திய சாலையினால் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை, நாளை 15 ஆம் திகதி முதல் யாழ் கூட்டுறவுச்சமாசத்தினர் மேற்படி கோழிப்பண்ணையை பொறுப்பெடுத்து அவர்களூடாக கோழிக்குஞ்சு விற்பனை இடம்பெறவுள்ளது.

(உ-6)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# தடகள விளையாட்டு போட்டிகள் சனியன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குள் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான தடகள விளையாட்டுப் போட்டி எதிர் வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு மரதன் ஓட்டம், சயிக்கிள் ஓட்டம் கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

பதிவு செய்யப்பட்ட கழகங்களின் அங்கத்தவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றலாம். என மேற்படி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

மரதன் ஓட்டம் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமாகி கோப்பாய்ச் சந்தி உரும்பிராய் வீதி, இராச வீதிச் சந்தி, இராச வீதி, இருபாலைச் சந்தி இருபாலையூடாக பருத்தித்துறை வீதிக்கு வந்து ஆரம்பமையத்தை அடையும்.

சயிக்கிள் ஓட்டம் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமாகி கோப்பாய்ச் சந்தி, உரும்பிராய் வீதி, இராச வீதிச் சந்தி, இராச வீதி, புத்தூர், நவககிரி, இராச வீதி சந்தி, புத்தூர், பருத்தித்துறைச் சந்தி, பருந்தித்துறை வீதி வழியாக ஆரம்பமையத்தை வந்தடையும்.

(உ)

# ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரணதுங்காவிற்கு ஜேர்மனியில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளுக்கு உததியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜேர்மனிக்குச் சென்றுள்ளார்.

(செ)

# போலிநோட்டு வைத்திருந்தோர் கைது

[கொழும்பு]

ஒருலட்சத்திஐயாயிரம் ரூபா போலி நோட்டுக்களை வைத்திருந்த இருவர் குளியாப்பிட்டிப்பகுதியில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்போலி நோட்டுக்கள் பற்றி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மாறுவேடத்தில் சென்று இவர்களைக் கைது செய்துள்ளனர். [செ]

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயரின் 45-வது நாள் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவுக்கு ஆஞ்சநேய பக்தனின் சமர்ப்பணம்

# ஸ்ரீ ஆஞ்சநேயர் போற்றி - 108 நாமார்ச்சனை

ஓம் அஞ்சனா தேவி பெற்ற அனுமனே போற்றி
ஓம் ஆஞ்ச நேயனே எங்கள் அருமையே போற்றி
ஓம் இன்னலைத் தீர்க்க வந்த இறைவனே போற்றி
ஓம் ஈடிலா வீர தீர இளமையே போற்றி
ஓம் உளத வாலை உச்சி உகந்தவா போற்றி
ஓம் ஊறிலா வண்ணம் காக்கும் உத்தமா போற்றி
ஓம் எண்ணரும் கலைகள் வல்லாய் எளிமையே போற்றி
ஓம் ஏற்றமே அருளும் செல்வ மாருதி போற்றி
ஓம் ஐநதெனும் போலனை வென்ற ஆண்டவா போற்றி
ஓம் ஒண்ணிதி வழங்க வல்ல உயர்முயமே போற்றி
ஓம் ஓங்காரம் செய்து துள்ளும் உரிமையே போற்றி
ஓம் ஔடதம் தேடிச் சேர்த்த அதிசயம் போற்றி
ஓம் கண்ணுதல் கருதும் செல்வ கண்மணி போற்றி
ஓம் காற்றிறை அருளால் வந்த கடமையே போற்றி
ஓம் கிண்கிணி தண்டை கொண்ட கிளர்ச்சியே போற்றி
ஓம் கிசகன் பகையின் அண்ணன் அனுமனே போற்றி
ஓம் குரங்கினத் தலைமைகொண் துணைவா போற்றி
ஓம் கூரிய சொல்லின் செல்வ கந்தா போற்றி
ஓம் கெடுதியை களையும் எங்கள் இறைவனே போற்றி
ஓம் கேடுகள் நீக்கும் ஆஞ்ச நேயனே போற்று
ஓம் கைவரு ராம பக்த அனுமனே போற்றி
ஓம் கொடுமையை நீக்க வந்த குமுதமே போற்றி
ஓம் கோடி சூரியப்பிரபை கொண்ட இறைவா போற்றி
ஓம் கௌவையைக் களையும் செல்வ மாருதி போற்றி
ஓம் சங்கடம் நீக்க எண்ணும் சத்தியம் போற்றி
ஓம் சாத்திரம் எல்லாம் கற்ற சற்குண போற்றி
ஓம் சிந்தனை சிறந்த செல்வ அனுமனே போற்றி
ஓம் சீரிய ஞான தீப மாருதி போற்றி
ஓம் சுந்தர முகங் கொள் ஞான சூக்குமம் போற்றி
ஓம் சூரியன் மாணியான சுடரொளி போற்றி
ஓம் செத்தமிழ் கம்பன் போற்றும் கீர்த்தியே போற்றி
ஓம் சேய்மையில் அண்மையாம் துணைவரே போற்றி
ஓம் சைலமே உறையும் எங்கள் சற்குணா போற்றி
ஓம் சொர்ணமே மேனியான சுந்தரா. போற்றி
ஓம் சோகமே தீர்ப்பாய் எங்கள் அனுமனே போற்றி
ஓம் சௌகரியம் சேர்ப்பாய் எங்கள் சஞ்சீவி போற்றி
ஓம் கடாயெனும் பெயர் கொண்ட கண்மணி போற்றி
ஓம் காட்டினில் மலையில் வாழும் கற்பகம் போற்றி
ஓம் கிளிபயில் சோலை எல்லாம திரிகுவை போற்றி
ஓம் கீண்டினை அசுரர் மாளக் கீர்த்தியே போற்றி
ஓம் குறைவறு கல்வி ஞானம் படைத்தனை போற்றி
ஓம் கூறுசொல் பன்னின செல்வன் சுந்தரன் போற்றி
ஓம் கெடுதியைச் சாய்த்து நீக்கும் அனுமனே போற்றி
ஓம் கேடறியாத தூத இறைவனே போற்றி
ஓம் கைநகம் வஜ்ரமான கண்மணி போற்றி
ஓம் கொள்கையில் உறுதி வாய்ந்த மாருதி போற்றி
ஓம் கோட்டையைத் தாண்டும் செல்வ மாருதி போற்றி
ஓம் கௌபீன் இறைவன் போற்றும் கனகமே போற்றி
ஓம் தண்ணிழல் ஆன எங்கள் புண்ணியா போற்றி
ஓம் தாங்கரும் துயரம் தீர்க்கும் தருநிழல் போற்றி
ஓம் திண்ணிய உரம்கொள் தேகா மாருதி போற்றி
ஓம் தீமையை நீக்கும் செல்வ அனுமனே போற்றி
ஓம் துணிவினில் சிறந்த எங்கள் அனுமனே போற்றி
ஓம் தூய்மை வாய்மை வாய்ந்த மெய்மையே போற்றி
ஓம் தெளிவுறு கேள்வி ஞானம் கிளர்த்துவை போற்றி
ஓம் தேடியே சஞ்சீ விநல்கும் சீர்த்தியே போற்றி
ஓம் தையலாம் சீதை போற்றும் தூதனே போற்றி
ஓம் தொழில் நலம் வலிமை நல்கும் தூயவர போற்றி
ஓம் தோளவலி மிக்க ராம தூதனே போற்றி
ஓம் தௌமியன் போற்றும் ஞான அனுமனே போற்றி
ஓம் நற்குண சீலரே மாருதி வீர போற்றி
ஓம் நாடிய தரவே வல்வாய் நாயக போற்றி
ஓம் நிச்சயம் பிரமச் சரியம் காத்தனை போற்றி
ஓம் நீடிய பகையை நீக்கும் நிறைகுணம் போற்றி
ஓம் நுண்மைகொள் அறிவு கொண்ட மாருதி போற்றி
ஓம் நாலறி புலவ ஞான பானுவே போற்றி
ஓம் நெற்றியில் நாமம் காட்டும் நெறியதே போற்றி
ஓம் நேர்ந்தனை ராம நாமம் தூதனே போற்றி
ஓம் நைந்திடும் நிலைமை நீக்கும நாயகா போற்றி
ஓம் நொந்திடா வண்ணம் காக்கும் நோக்கமே போற்றி
ஓம் நோயினை அண்டா வண்ணம் காக்கநீ போற்றி
ஓம் நௌவியின் சென்ற இராம தூதரே போற்றி
ஓம் பலநலம் கொண்ட எங்கள் பரமான போற்றி
ஓம் பாலக வஜ்ர தேகா அனுயனே போற்றி
ஓம் பிலமதில் சென்று வெற்றி சேர்த்தனை போற்றி
ஓம் பீழைகள் நீக்கும் செல்வ மாருதி போற்றி
ஓம் புன்மைகள் தன்னை நீக்கும் புனிதமே போற்றி
ஓம் பூவடைக் கானம் வாழும் பூரண போற்றி
ஓம் பெருமைகொள் உரமே பெற்ற பரமனே போற்றி
ஓம் பேசரு வியாகரணம் பிறவெலாம் கற்றாய் போற்றி
ஓம் பைம் பொழில் திரியும் அன்பே அனைத்துநீ போற்றி
ஓம் பொறுமைகொள் அறத்தின்தூத புண்ணியா போற்றி
ஓம் போயினை வென்றாய் நன்றாய் பூரண போற்றி
ஓம் பௌவமே தாவிப் பாயும் பரமனே போற்றி
ஓம் எக்குலத் தாரும் போற்றும் இறைவனே போற்றி
ஓம் எங்ஙனும் நீயே உள்ளாய் இறைவனே போற்றி
ஓம் அச்சரத்தால் வாழி அழிந்திடச் செய்தாய் போற்றி
ஓம் அஞ்சனை செல்வ அரிய செம்மணியே போற்றி
ஓம் திடமாய்ச் செயல் செய்யுந் தனகரன் தூத போற்றி
ஓம் திண்ணமாய் வெற்றி தரும் ஆஞ்சநேயனே போற்றி
ஓம் எத்திறம் தனிலும் வல்ல இனிய மாருதியே போற்றி
ஓம் எந்தையர் சிந்தை வாழும் இறைவ மாருதியே போற்றி
ஓம் எம்மருங் கினிலும் வாழும் இறைவா போற்றி
ஓம் எப்பரம் பொருளும் வாழ்த்தும் இனியவா போற்றி
ஓம் எவ்வனம் செலினும் உய்வன சொல்வாய் போற்றி
ஓம் எய்திடும் இனிமை எல்லாம் இயற்றுவை போற்றி
ஓம் இல்லற ராம தூதன் எங்கள் மாருதியே போற்றி
ஓம் நள்ளிரா தன்னில் காக்கும் காலசஞ்சீவி போற்றி
ஓம் ஆழ்கடல் கடந்த வஜர தேகனே இறைவா போற்றி
ஓம் பாற்கடல் பிறந்த மாது பரிவுறும் கடமை போற்றி
ஓம் மார்பினைப் பிளந்து மாயன் மகத்துவம் அளித்தாய் போற்றி
ஓம் பன்னலம் சேர்க்கும் எங்கள் பதம தேகனே போற்றி
ஓம் நன்னயம் சேர்க்கும் எங்கள் ராம தூதனே போற்றி
ஓம் பொள்ளவிர் அஞ்சனை தந்த புதுமையே போற்றி
ஓம் நூற்கடல் கடந்த எங்கள் நுண்மையே போற்றி
ஓம் நாற்பயன் விளைக்கும் எங்கள் நாயகா போற்றி
ஓம் பாற்படு பொருளில் எல்லாம் படர்ந்தனை போற்றி
ஓம் போற்றியே அனும போற்றி பூரணா போற்றி போற்றி

**ஆஞ்சநேய பக்தர்**

(கி-1594)

# உடுவில் மத்திய மருந்தகத்திற்கு மருந்துகள் அனுப்புவதில் தாமதம்

## கையிருப்பும் முடியும் தறுவாயில்

(யாழ்ப்பாணம்)

உடுவில் மத்திய மருந்தகத்திற்கு கடந்த காலங்களில் மருந்துகள் அனுப்பி வைக்கப்படாமையினால், அங்கு எதிர்காலத்தில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதென மருந்தக பதிவுபெற்ற வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மூன்று மாதத்திற்கு ஒரு தடவை என்ற ரீதியில் அனுப்பிவைக்கப்படும் மருந்துத் தொகுதி கடந்த மார்கழி மாதத்தின் பின்னர் இன்னமும் அனுப்பிவைக்கப்படவில்லை எனவும்,

தற்பொழுது ஒருவாரத்திற்குப் போதுமான மருந்துகள் மாத்திரமே கையிருப்பில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,

மருந்துகட்டும் துணிகள் முடிவடைந்து விட்டதால், நோயாளர்கள் அவற்றை வீட்டில் இருந்தே எடுத்து வரும் நிலை காணப்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார். (உ-2)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2 மணிக்கு கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் ஆலய வீதி விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் சு. இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக மேலதிக மாகாணக் கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் பூ. புலேந்திராஜாவும்,

சிறப்பு விருந்தினராக மேற்படி பாடசாலை முன்னாள் அதிபர் த. திருநாவுக்கரசவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-6)

## சுற்றுலா செல்வோர் தீவகத்திற்கு படையெடுப்பு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிக்கு சுற்றுலா செல்பவர்களின் தொகை கடந்த சில தினங்களாக அதிகரித்துக் காணப்படுகிறது.

நயினாதீவில் உள்ளவரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அருள்மிகு நாகபூசணி அம்பாள் ஆலயம் மற்றும் சாட்டி வெள்ளக் கடற்கரை போன்ற இடங்களை, தீவகப்பகுதி செல்லும் சுற்றுலாப்பயணிகள் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை, தீவுப்பகுதிக்குச் செல்வோர் மீது கடற்படையினர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் பெருந்தொகையானோர் அங்கு சுற்றுலா செல்வதில் நாட்டம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. [உ-75]

## வலி.தெற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

வலி. தெற்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெறஇருந்தஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் உட்பட பிரதேச மட்ட சிறுவர் பாதுகாப்புக்கு குழுக் கூட்டம், பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் என்பன ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

வலி. தெற்கு பிரதேச செயலரின் மறைவின் காரணமாக இவை பிற்போடப்பட்டுள்ளன.

இக் கூட்டங்கள் நடைபெறுவது தொடர்பான திகதி பின்னர் அறிவிக்கப்படுமென திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ரி.தேவராஜன் அறிவித்துள்ளார். [உ-2]

## வட்டுக்கோட்டை மிருக வைத்தியசாலைக்கு விரைவில் நிரந்தர கட்டடம்

(ஈச்சமோட்டை)

நீண்ட காலமாக நிரந்தர கட்டடம் இன்றி பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் இயங்கி வந்த வட்டுக்கோட்டை மிருக வைத்திய சாலை விரைவில் புதிய நிரந்தரக்கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இப்பகுதிக் கிராம உத்தியோகத்தர் நாகரத்தினம் இதற்கான முன் முயற்சிகளில் துடிப்புடன் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

மாவடி அடைக்கலந் தோட்டம் கந்தசுவாமி கோயிலுக்குச் சொந்தமான காணி 99 வருடங்கள் குத்தகைக்கு எடுக்கப்பட்டு மிருக வைத்தியசாலை சட்டடப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. (உ-59)

## கூரையில்லா பஸ்தரிப்பிடம் பயணிகள் பரிதவிப்பு

(இணுவில்)

மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் மானிப்பாய் வீதியில் உள்ள பேருந்து தரிப்பிடம் நீண்ட காலமாக பாவிக்கமுடியாத நிலையில் காணப்படுகிறது.

கூரைஇன்றி மேற்படி பேருந்து தரிப்பிடம் காணப்படுவதனால் பயணிகள் வெயில் மற்றும் மழைக்கு அஞ்சி அயலில்உள்ள கடைக் கட்டடங்களில் தஞ்சம் புகுவதாகவும்,

இதனால் சில வேளைகளில் பேருந்தினைத் தவறவிட்டுத் தவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-49)

## இளம் பெண்கள் இருவர் தீயிற்கருகிப் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்குடாப் பகுதியில் 20 வயதுடைய இளம் தாய் தீயில் உடல்கருகி உயிர் நீத்துள்ளார். மேற்படி பெண் தனது 5 மாதக் குழந்தைக்கு பால் தயாரிக்க எண்ணெய் ஊற்றி அடுப்பைப் பற்றவைத்த வேளை தீப் பிடித்துக் கொண்டதாகத் தெரியவந்துள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த மற்றொரு 20 வயதுடைய பெண் தனது கணவருடன் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தினை அடுத்து கணவரை மிரட்டுவதற்காக தனது உடலில் மண்ணெண்ணெயயை ஊற்றி எரியூட்டி தற்கொலை செய்துள்ளார். (உ-9)

## இராசி பலன்

14 3.2001
(பங்குனி 1, புதன்)
பஞ்சமி மாலை 5.23 வரை
விசாகம் மு.இ 11 12 வரை
ராகுகாலம் 12.22- 1.52
சுபநேரம் 4.52- 6.22
சித்தாமிர்தம்.

**மேடம்**
திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, வாகனவசதி, மதிக்கப்படுதல்.

**இடபம்**
புதிய முயற்சி, எதிரிகளால் நன்மை, வியாதி குணமடைதல், பொருள் சேர்க்கை.

**மிதுனம்**
பிரயாண இடையூறு, மனக்கிலேசம், புத்திரரால் கவலை, காரிய தாமதம்.

**கடகம்**
தாய்வழி உறவு, அற்பர் நேசம், உறவினர்கள்மனஸ்தாபம், நிலை மாற்றம்.

**சிங்கம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, இனிய சம்பவம், முயற்சி வெற்றி, அந்நியர் சந்திப்பு.

**கன்னி**
பொருள் விரயம், காரிய தடங்கல், எதிர்பாராத நன்மை, கௌரவக்குறை.

**துலாம்**
அமைதியான நிலை, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, பெரியோர் ஆசி.

**விருச்சிகம்**
அலைச்சல், மன அமைதிக் குறைவு, தனவிரயம், முயற்சி தாமதம்.

**தனுசு**
தனலாபம், மனமகிழ்ச்சி, நினைத்த காரியம் கைகூடும், உறவினர் சந்திப்பு.

**மகரம்**
அரச நன்மை, தொழில் சிறப்பு, சுப நிகழ்ச்சி, பிறர் உதவி.

**கும்பம்**
கட்டுப் பாடு, உடல் உழைப்பு, புதிய திட்டம், பிரயாணம்.

**மீனம்**
உஷ்ண நிலை, எதிர்பாராத பிரச்சினை, பிரயாணதடங்கல், காரிய தடங்கல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 155273 ஏ | 181637 ஏ |
| 181637 பி | 182710 ஏ |
| 183313 ஏ | 183514 ஏ |
| 183514 பி | 183519 ஏ |
| 183519 பி | 183519 சி |
| 183519 டி | 184914 ஏ |
| 184914 பி | 184914 சி |
| 185236 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 182099 ஏ | 182099 பி |
| 182099 சி | 182099 டி |
| 182099 ஈ | 182099எப் |
| 182099 ஜி | 184350 ஏ |
| 184359 ஏ | 184359 பி |
| 184533 ஏ | 184668 ஏ |
| 184716 ஏ | 184716 பி |
| 184716 சி | 184776 ஏ |
| 184804 ஏ | 184804 பி |
| 184804 சி | 184820 ஏ |
| 184820 பி | 184821 ஏ |
| 185848 ஏ | 185848 பி |
| 185848 சி | 185911 ஏ |
| 185911 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 184682 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 156885 ஏ | 179786 ஏ |
| 179786 பி | 179964 ஏ |
| 179964 பி | 179964 சி |
| 181835 ஏ | 181846 ஏ |
| 181846 ஏ | 181956 ஏ |
| 184503 ஏ | 184503 பி |
| 184733 ஏ | 184733 பி |
| 185931 ஏ | 182780 ஏ |
| 183382 ஏ | 183382 பி |
| 185128 ஏ | 185128 பி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 179052 ஏ | 179052 பி |
| 181410 ஏ | 181411 ஏ |
| 183214 ஏ | 183214 பி |
| 183214 சி | 183384 ஏ |
| 184947 ஏ | 184993 ஏ |
| 184993 பி | 185023 ஏ |
| 185023 பி | 185036 ஏ |
| 185060 ஏ | 185117 ஏ |
| 185117 பி | 185125 ஏ |
| 185131 ஏ | 185191 ஏ |
| 185199 ஏ | 185199 பி |
| 185199 சி | 185199 டி |
| 185316 ஏ | 186908 ஏ |
| 186908 பி | 186908 சி |
| 186950 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 185127 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 176555 ஏ | 176555 பி |
| 183450 ஏ | 183483 ஏ |
| 183483 பி | 183506 ஏ |
| 183506 பி | 185010 ஏ |
| 185010 பி | 185156 ஏ |
| 185183 ஏ | 185253 ஏ |
| 185258 ஏ | 185270 ஏ |
| 185270 பி | 186919 ஏ |

மார்ச் மாதம் 11 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகிறது.

### சங்கானை

| | |
|---|---|
| 176906 ஏ | 176906 பி |
| 176906 சி | 176906 டி |
| 178648 ஏ | 179057 ஏ |
| 179057 பி | 179057 சி |
| 179057 டி | 179057 ஈ |
| 1794 8 ஏ | 179418 பி |
| 182709 ஏ | 182711 ஏ |
| 182784 ஏ | 182784 பி |
| 183422 பி | 183422 சி |
| 183422 டி | 183448 ஏ |
| 183522 ஏ | 183523 ஏ |
| 184847 ஏ | 184988 ஏ |
| 184988 பி | 184988 சி |
| 185172 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 137334 ஏ | 154124 ஏ |
| 173867 ஏ | 178255 ஏ |
| 178255 பி | 178255 சி |
| 182012 ஏ | 182012 பி |
| 184391 ஏ | 184415 ஏ |

| | |
|---|---|
| 184443 ஏ | 184443 பி |
| 184443 சி | 184443 டி |
| 184593 ஏ | 184643 சி |
| 184643 பி | 184643 ஏ |
| 184652 ஏ | 184652 பி |
| 184674 ஏ | 184719 ஏ |
| 184730 ஏ | 184741 ஏ |
| 184741 பி | 184741 சி |
| 184741 டி | 184760 ஏ |
| 184798 ஏ | 184798 பி |
| 184798 சி | 184798 டி |
| 185897 ஏ | 185925 ஏ |
| 185942 ஏ | 185942 பி |
| 185956 ஏ | 185971 ஏ |
| 185972 ஏ | 185990 ஏ |
| 186026 ஏ | 183026 பி |
| 186036 ஏ | 186129 ஏ |
| 186129 பி | 186129 சி |
| 186129 டி | 186129 ஈ |

### நல்லூர்

| | |
|---|---|
| 180056 ஏ | 180271 ஏ |
| 180271 பி | 181855 ஏ |
| 184646 ஏ | 184698 ஏ |
| 184751 ஏ | 184753 ஏ |
| 184753 பி | 184796 ஏ |
| 185762 ஏ | 185862 பி |
| 185945 ஏ | 183157 ஏ |
| 183157 பி | 183415 ஏ |
| 183415 பி | 183415 சி |
| 183415 டி | 183490 ஏ |
| 184976 ஏ | 184976 பி |
| 184978 ஏ | 184978 பி |
| 184978 சி | 185085 ஏ |
| 186972 ஏ | 193215 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 160787 ஏ | 181502 ஏ |
| 181663 ஏ | 181663 பி |
| 181696 ஏ | 183084 ஏ |
| 183084 பி | 183111 ஏ |
| 183124 ஏ | 183124 [illegible] |
| 183151 ஏ | 183448 பி |
| 183480 ஏ | 183480 பி |
| 184827 ஏ | 184827 பி |
| 184827 சி | 184886 ஏ |
| 184897 ஏ | 184897 பி |
| 184897 சி | 184946 ஏ |
| 184946 பி | 184946 சி |
| 184959 ஏ | 185051 ஏ |
| 185067 ஏ | 185160 ஏ |
| 185232 ஏ | 185313 ஏ |
| 185313 பி | 185313 சி |
| 186916 ஏ | 186939 ஏ |
| 186939 பி | 187005 ஏ |
| 187005 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 182694 ஏ | 182694 பி |
| 184843 ஏ | 184860 ஏ |
| 184860 பி | 184860 சி |
| 185057 ஏ | 185065 ஏ |
| 185065 பி | 185123 ஏ |
| 185123 பி | 185123 சி |
| 185982 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 179141 ஏ | 180317 ஏ |
| 182748 ஏ | 182748 பி |
| 183147 ஏ | 183167 பி |
| 183213 ஏ | 183302 ஏ |
| 183303 ஏ | 183374 ஏ |
| 183374 பி | 183387 ஏ |
| 183387 பி | 183387 சி |
| 183387 டி | 184929 ஏ |
| 184968 ஏ | 185017 ஏ |
| 185078 ஏ | 185078 பி |
| 185159 ஏ | 185168 ஏ |
| 185168 பி | 185198 ஏ |
| 185228 ஏ | 185228 பி |
| 185238 ஏ | 185252 பி |
| 185252 சி | 182252 டி |
| 186923 ஏ | 185140 ஏ |
| 185149 ஏ | 185252 ஏ |

## ஆலயத்திற்கு அன்பளிப்பு

[ஈச்சமோட்டை]

வட்டுக்கோட்டை கண்ணகையம்மன் ஆலயத்திற்கு, மூளாய் வீதியைச் சேர்ந்த சுதாகரன் என்பவர் மின்பிறப்பாக்கி ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளார். (உ-59)

## மதகில் வீழ்ந்து கால் முறிவு

(யாழ்ப்பாணம்)

சட்டநாதர் சிவன் கோவிலடி மதகில் தவறுதலாக வீழ்ந்ததால் கால் முறிந்தும், தலையில் பலத்த காயங்களுடனும் நல்லூரைச் சேர்ந்த தி.சிவராசா (வயது 51) என்பவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 08

### ஆக்கம்: செல்வி

★ பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொல்லைத் தருக?

01) வேழம்————
02) அமபுயம்————
03) கானகம்————
04) அகழ்தல்————
05) வெற்பு————

★ பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தருக?

06) சிங்கத்துக்கு குகைபோல குதிரைக்கு————
07) மீனுக்கு கத்திபோல துணிக்கு————
08) ஐந்திற்குப் பன்னிரெண்டுபோல வைகாசிக்கு————
09) கறிக்கு உப்புப் போல தேனீருக்கு————
10) குழந்தைக்கு தாய்போல கன்றுக்கு————

★ பின்வரும் சொல் வரிசையில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக?

11) கழுகு, ஆந்தை, கிளி, வல்லூறு
12) அத்தர், புனுகு, கந்தகம், ஜவ்வாது
13) வளையல், குண்டலம், குழல், கழல்
14) அப்பிள், திராட்சை, பருத்தி, றம்புட்டான்
15) புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஔவையார், சின்னத்துரை

★ 'அ' தொகுதியிலுள்ள சொற்களின் ஒத்தகருத்து சொல்லை 'ஆ' தொகுதியில் தெரிந்து அதன் கீழ் கீறிடுக?

| | அ | ஆ |
|---|---|---|
| 16) | தை, மாசி, பங்குனி | நாள், மாதம், வாரம் |
| 17) | பூனை, புலி, சிறுத்தை | காடு, மிருகம், வீடு |
| 18) | வெள்ளி, சனி, ஞாயிறு | கிழமை, திதி, நேரம் |
| 19) | மல்லிகை, முல்லை, ரோசா | வண்ணம், அழகு, மலர் |
| 20) | தோடு, சங்கிலி, மோதிரம் | ஆபரணம், இரும்பு, செம்பு |

★ பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப்பதத்தை எழுதுக?

21) PRESENTS————
22) CAMERA ————
23) GREETING CARDS————
24) CROCODILE————
25) BUTTERFLY————

★ பின்வரும் பந்தியை வாசித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடைதருக?

சுஜி சஜியிலும் அழகி சிவந்தவள் ஆனால் குஜியைவிட மெலிந்தவள். கஜி கருமை நிறத்தவள் ஆனால்குஜியை விடபருத்தவள் சுஜியிலும் உயரம் குறைந்தவள். குஜி அழகற்றபோதும் உயரமானவள்.

26) இவர்கள் எல்லோரிலும் பார்க்க அழகான மெலிந்த உயரமானவர் யார்?
27) இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?
28) இவர்களில் விசேட அம்சங்கள் எதுவும் அற்றவர் யார்?
29) இவர்களில் உயரங்கூடிய அழகற்றவர் யார்?
30) இவர்களில் நல்ல நிறமுடையவர் யார்?

குறிப்பு:-

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 20-03-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**கல்விப் பகுதி**
**வினா இல: 08**

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ……………………
சொந்த முகவரி: ……………………
கற்கும் பாடசாலை: ……………………
மாணவர் கையொப்பம்: ……………………

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## மாணவச் செல்வங்களே!

நீங்கள் புலமைப்பரிசில் விடைகளை அனுப்பும் போது தவறாது பாடசாலைப்பெயர்குறிப்பிடவேண்டும்.

குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விடைகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

விடைகளை அனுப்பும்போது கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் தவறாது "கல்விப் பகுதி" எனக் குறிப்பிடவும். ஆ-ர்

புலமைப் பரீட்சை

## வினா இல-07

### விடைகள்

1) ஏற்றல்
2) அநுசிதம்
3) அத்தமனம்
4) இம்பர்
5) செறிவு
6) உழவன்
7) இரவலன்
8) ஆயன்
9) ஆசிரியன்
10) அரக்கன்
11) தோழன்
12) அண்ணி
13) மகுடம்
14) சுக்ரீவன்
15) மண்டோதரி
16) இலங்காபுரியை
17) அயோத்தியை
18) கேகயன்
19) சுமித்திரை
20) ஊர்மிளை
21) இறைச்சி
22) கணவாய்
23) றால்
24) மீன்
25) முட்டை
26) 10 இனிப்புக்கள்
27) சீதா
28) ராதா
29) சாந்தா
30) சுதா

# வினா அறிவுறுத்தலை நன்கு விளங்க வேண்டும்

புதிய பாடத்திட்டத்திற்கமைவாக வினாத்தாள்கள் தயாரிக்கப் படுகின்றமையால் அதன் அமைப்பு ஒவ்வொரு வருடமும் மாறுகின்றது என்பதை தரம் ஐந்திற்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் உணர்வதில்லை.

பல பாடசாலைகளில் தரம் ஐந்திற்கான பாடப்புத்தகங்களை முடித்து விட்டு, தரம் ஆறு, எழு, எட்டு வகுப்புக்களுக்குரிய மொழியைக் கற்பிக்கின்றார்கள் இது அவர்கள் ஆசிரியர்களது கை நூல்களைப் படிக்காததால் வந்த குறைபாடாகும். பல ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கை நூல்கள் எபபடியானவையென்று தெரியாத போது பெற்றோர்களுக்கு எப்படித் தெரியும்?

வினாத்தாள்கள் பாடப் பரப்புக்குள்ளேவித்தியசமான முறையில் தயாரிக்கப்படுகின்றன. ஒரு சில மூலப்பொருட்களைக் கொண்டு சுவை வேறுபாடான உணவுப் பொருட்களைத் தயாரிப்பது போல் தான், பாடத்திட்டத்தை மையமாகக் கொண்டு பல்வேறு விதமான அமைப்புக்களில் வினாக்கள் தயாரிக்கப் படுகின்றன. இவ் உதாரணத்தைக்கட்டாயம் சொல்ல வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டதென்றால் ஆசிரியர்கள் பலருக்கு இன்று வரை இப் பரீட்சையின் தன்மை விளங்கவில்லை என்பதாலும் பெற்றோர்களுக்கு தெளிவு ஏற்பட வேண்டும் என்பதாலுமே.

> 'வருடந்தோறும்மாற்றி அமைக்கப்படும் வினாக்களுக்கு ஏற்ப மாணவர் தம்மை தயார்ப்படுத்திக் கொள்வது அவசியம்'
>
> கே.வி. குணசேகரம்

இப்பரீட்சையைப் பொறுத்தமட்டில் முழுப் பாடத்திட்டமும் நிறைவேற்றப்படல் வேண்டும். அத்துடன் தரம் மூன்று நான்கிற்கான பாடப் பரப்பு மீளவலியுறுத்தப்படல் வேண்டும். எந்த ஒரு பாடத்தையும் ஒதுக்கி விட முடியாது. சமயத்தைப் பொறுத்தளவில் கூட சைவம், கிறிஸ்தவம், பௌத்தம ஆகிய சமயங்களின் அடிப்படை அறிவு அவசியமானதாகும்.

இவ் வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளை உடையது. முதலாம் பகுதி நாற்பத்தைந்து நிமிடங்களையும், இரண்டாம் பகுதி எழுபத்தைந்து நிமிடங்களையும் கொண்டது. இரு பகுதிகளும் பன்னிரெண்டு பக்கங்களைக் கொண்டவை. எனவே பிள்ளை விரைவாக வாசித்தல் வேண்டும். வாசித்ததை விளங்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் சரியான முறையில் செயற்படல் வேண்டும். எவ்வளவு தான் கெட்டிக்காரப் பிள்ளையானாலும் வினாக்களுக்கான அறிவுறுத்தல்களை விளங்கிக்கொள்ளாவிட்டால் சித்தியடைய முடியாது. பிரபல பாடசாலை ஒன்றில்இருபதுக்குமேற்பட்ட பிள்ளைகள் சித்தியடைந்தபோதும் தரம் ஒன்றில்இருந்து தரம் ஐந்து வரை சகலபாடங்களிலும் தொண்ணூறு புள்ளிகளுக்கு மேல்பெற்றுமுதலாம் பிளளையாக வரும் ஒரு மாணவி நூற்றிமுப்பது புள்ளிகளைப்பெற்றுசித்தியடையவில்லை. இதற்கு காரணம் அம்மாணவிவினாக்களுக்கான அறிவுறுத்தல்களை சரிவரப் புரிந்து கொள்ள முடியாமையேயாகும். இதற்கு ஆசிரியர்களும் ஒரு வகையில் காரணமாக அமையலாம்.

## புலமைப்பரிசில் பரீட்சை
## வினா இல. 07

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01) தி. திலீபன், வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
02) க. நிரோஜினி, யாழ். புனித மரியாள் வித்தியாலயம்.
03) ம. ஷாளினி, வட இந்துமகளிர் கல்லூரி.
04) பா. ஷாயிசங்கர், வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி.
05) சா. அலன்டியந்தா, யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
06) ச. பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
07) க. அனுஷா, அராலி முருகமூர்த்தி வித்தியாலயம்.
08) பா. தயாளினி, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்.
09) ர. துவாரகா, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.
10) சி. துவாரகன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
11) சி. தீபகா, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
12) மோ. ஜீர்த்தன், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.
13) த. அனுஜா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
14) சி. பிரணவன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
15) சி. லகீசன், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்.
16) கு. கஸ்தூரி, சாவ. இந்து ஆரம்ப பாடசாலை.
17) ர. தீபனா, தேவரையாளி இந்துக்கல்லூரி.
18) கி. தற்பரன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
19) பா. கௌசிகா, தாவடி இ.த.க. பாடசாலை.
20) தி. தனம்ஜெயன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
21) ப. தாமரா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
22) இ. பிரதிகா, சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம்.
23) த. விபுசன், யாழ். மெ.மி.த.க. பாடசாலை.
24) தே. சயந்தன், மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை.
25) நி. நிருபன், சாவ. இந்து ஆரம்ப பாடசாலை.
26) ர. அனுஜன், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
27) ச. தவரூபா, யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம்.
28) ஈ. ஸ்ரலின் டேவிட், உடுவில் மகளிர் கல்லூரி.
29) ம. சானியா, உடுவில் மகளிர் கல்லூரி.
30) சி. கஜந்தினி, சாவ.இ.ஆ. பாடசாலை.
31) இ. சபிதா, அல்லாரை அ.த.க. வித்தியாலயம்.
32) ம. மேரி றெபிக்கா, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்.
33) ஜோய் ஜெயறீற்றா, உடுவில் மகளிர் கல்லூரி.
34) கி. ஜெயந்தினி, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
35) இ. வினிபிறட்ஸ்ரீபன், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.
36) பு. ராஜாராம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
37) நீ. திவாகர், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
38) ம. லவண்ராஜ், புலோலி புற்றளை மகாவித்தியாலயம்.
39) வி மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
40) செ. நிருஜா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
41) த. தர்சிகா, புலோலி புற்றளை மகாவித்தியாலயம்.
42) த. நிலஜா, யாழ். இந்து மகளிர் கல்லூரி.
43) யோ. மருதிகா, அல்லாரை அ.த.க. வித்தியாலயம்.
44) க. சரவணபவன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
45) வி.கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.
46) ச. தீபிகா. புலோலி புற்றளை மகாவித்தியாலயம்.
47) க. சாயினி, நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்.
48) சி. கோமளதரன், மாணிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
49) ந. சுஜாணி. சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.

## மண்டல அபிஷேகம் பூர்த்தி

[யாழ்ப்பாணம்]

இணுவில் மருதனார் மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயரின் 45 வது நாள் மண்டலாபிஷேக பூர்த்திவிழா இன்றாகும். இன்று காலை சங்காபிஷேகத்துடன் விஷேட பூசைகளும் மதிய அன்னதானமும் மாலை சீதாராமதிருக்கல்யாணவைபவமும் இன்னிசைக் கச்சேரியும் சமய சொற்பொழிவுகளும் இடம் பெறவுள்ளன. (உ-2)

## அரவம் தீண்டியது

[யாழ்ப்பாணம்]

வீட்டில் இருந்த சமயம் பாம்பு தீண்டிய இளம்பெண் ஒருவர் மந்திகை மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த சி. யூட் அமலராணி (வயது-21) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (உ-10)

## இன்று ஒரு தகவல்

# கோயிலுக்குச்செல்லுங்கள்

திருக்கோயில்களும், அங்குள்ள திருவுருவங்களும் நமக்கு இறை உணர்ச்சியை வளர்ப்பதற்காக நமது முன்னோர்கள் அன்போடு செய்து வைத்த அரும் பெருஞ் செயல்களின் அருள் தோற்றங்களாக விளங்குபவைகளே. நமது முன்னோர்கள் கோயிலினுள் உள்ள திருவுருவத்தை ஏதோ கற்சிலையென எண்ணவில்லை. அங்கு கடவுளையே கண்டார்கள், அவரோடுபேசினார்கள். இறைவனது உண்மைத் தன்மைகள் பலவற்றையும் அனுபவித்துப் பாடினார்கள்.

பிறசமயத்தவர்கள் கோயிலுக்குப் போவதைத் தங்கள் கடமையாகக்கருதுகின்றனர். வாரம் ஒரு முறை, இருமுறை கிறிஸ்தவ சகோதரர்கள் தங்கள் தேவாலயங்களுக்குப் போகின்றனர். இஸ்லாமிய சகோதரர்கள் தினம் தினம் மசூதிக்குச் செல்கின்றனர்.

தினம் ஐந்து வேளைமசூதிக்குச் செல்லும் முஸ்லிம் சகோதரர்கள் அநேகர் உண்டு.

ஆனால் இந்துக்களாகிய நம்மில் பலர் கோயிலுக்குப் போகும் கடமையை மறந்து விட்டார்கள். படித்தவர்களில் பெரும்பாலோர் ஆலய வழிபாட்டை அறவே கைவிட்டிருக்கின்றனர். ஏதோ பாமரமக்களுக்கும், பெண்களுக்கும் தான் கோயில்கள் என்று எண்ணவும் செய்கிறார்கள். கோயிலுக்குப்போவதைக் கண்டால் பிறர்ஏளனம் செய்வார்களோ என்று எண்ணும் சகோதரர்களும் இருக்கிறார்கள். இந்துக்களாகிய நாம் ஒவ்வொருவரும்இனியாவது தவறான இக் கருத்துக்களை விட்டொழித்து, வாரம் ஒரு முறையாவது தவறாது கோயிலுக்குச்குடும்பத்தோடு சென்று அனைத்திற்கும் மேலான இறைசக்தியை வழிபாடு செய்யும் நியதியை மேற்கொள்வோமாக. அப்படிக் கோயிலுக்குப் போகும் போது, அடக்க ஒடுக்கத்துடன் அமைதியாகச் சென்று, சிந்தையை இறைவன் பாற் செலுத்திப் பக்தியோடு வழிபட்டு உய்வோமாக.

க.க.இராமலிங்கம்

# சண் நிறுவனத்தின் வழிகாட்டலில் சுயதொழில் வேலைத்திட்டங்கள்

## ஆரம்பப் பணிகள் வெற்றிகரம்

(ஈச்சமோட்டை)

'சண்' நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் சுய தொழில் முயற்சியாளர்களுக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கும் முதற்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காரைநகர், தம்பாட்டி, மக்களின் கைத்தொழில் விருத்திக்காக, சண் நிறுவன உதவித் திட்டத்தின் கீழ், பனங்கட்டி உற்பத்தி, கடிதஉறை தயாரிப்பு போன்றவை பயிற்சிபெற்ற யுவதிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் அடுத்தகட்டமாக மணற்காடு, குடத்தனை போன்ற பகுதிகளில் மெழுகுதிரி தயாரிப்பு, கருவாடு. புழுக்கொடியல் பதனிட்டு பொதிசெய்தல் மற்றும் சந்தைப் படுத்தல் போன்றவற்றிக்கான முயற்சிகளும் துரித கதியில் மேற்கொளளப்பட்டு வருகின்றன.

இதனால் பல யுவதிகளுக்கு தொழில் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப் படுவதோடு அவர்களது திறமைகளும் வளர்வதற்கு ஏதுவாக அமையுமென 'சண்' நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ-59)

# காசோலைகள் மாற்றுவதில் காலதாமதம் மக்கள் அலைச்சல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளையில் காசோலைகள் மாற்றுவதில் காலதாமதம் ஏற்படுவதாக பொது மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு வழங்கப்படும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு அசையும் அசையாத சொத்துக்களுக்கான இழப்பீடுகள் போன்றவற்றுக்கு வழங்கப்படும் காசோலைகள் மாற்றுவதிலேயே காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொடுப்பனவுகளுக்கான காசோலைகளை வங்கிக்கு அனுப்பப்பட்டுவிட்டது என பிரதேச செயலகங்களுக்குச் செல்லும் பொதுமக்களிடத்து கூறியதற்கிணங்க வங்கிக்குச் சென்றால், 15 நட்களின் பின் வந்து பணத்தினைப் பெறுமாறு வங்கியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கூறுகின்றனராம். [உ-75]

# தருப்புமுகாம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலக அதிகாரிஎன் ஜீவேஸ்வரா இன்று புதன்கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்புமுகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப், பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர்எடுத்துச்சென்று கையளிக்கவுள்ளார். [உ-10]

# குருவிச்சை விபரம் திரட்டும் சமுர்த்தி உத்தியோகத்தர்

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதியில் உள்ள குறிப்பிட்ட ஒரு பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மரங்களில் உள்ள குருவிச்சை தொடர்பான விபரங்களினைத் திரட்டுமாறு பணிக்கப்பட்டுள்ளதாம்.

சமுர்த்தித்திட்டம் நடைமுறைக்கு வராமையினாலேயே இவ்வாறான பணிகள் சுமத்தப்படுவதாகவும், இவ்வாறான வேலைகள் புரியும் காரணத்தினால் சமுர்த்தி உத்தியோகத்தர் தொடர்பான மதிப்பு பொது மக்கள் மத்தியில் குறைந்து வருவதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து சமுர்த்தி உத்தியோகத்தர்களும் முன்பு பனைமரம் தொடர்பான விபரங்களைத் திரட்டியமை தெரிந்ததே. (உ-75)

# மின்பிறப்பாக்கி பழுது காரைநகர் இருளில்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் பகுதிக்கு மின்சாரம் வழங்க பயன்பட்டு வந்த மின் பிறப்பாக்கி பழுததடைந்த நிலையில் இருப்பதால், கடந்த 3 மாதங்களாக காரைநகர் இருளில் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றது.

150 கிலோவாற் கொண்ட மின் பிறப்பாக்கியைப் பயன்படுத்தி காரைநகர் பகுதியில் உள்ள 250க்கு மேற்பட்ட பாவனையாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

மின்பிறப்பாக்கி பழுதடைந்து பயனற்று இருப்பது தொடர்பாக தொடர்புடைய வட்டாரங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் 3 மாதங்களாகியும் பயன்ஏதும் கிட்டவில்லையென சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (உ-75)

# நிழல் குடை அமைக்கப்படுமா

[கல்வயல்]

புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியில் பெரும் பணச் செலவில் அமைக்கப் பட்ட அதன் ஸ்தாபகர் சிலை பராமரிப்பின்றிக் காணப்படுகின்றது.

இச் சிலைக்கு நிழல் குடை ஒன்று அமைக்கப் படாமையினால, பட்சிகள் எச்சமிட்டு அசிங்கப்படுத்துவதுடன் வெயில் மற்றும் மழைத தாக்கங்களுக்கும் உட்பட்டுவருகிறது. (உ-111)

# பல்லசுட்டியில் பாதிப்புற்ற குடியிருப்பாளர்களுக்கு கூரைத்தகடு விநியோகம்

## பி. ச. தலைவர் வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் பல்லசுட்டிப் பகுதியில், எரிந்து நாசமான மூன்று குடியிருப்புகளின் உரிமையாளர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அவசர பணிப்பின் பேரில் நேற்றுமுன்தினம்ஒருஇலட்சம் ரூபா பெறுமதியான சீமெந்து கூரைத் தகடுகள் வலிமேற்கு பிரதேசசபைத் தலைவர் என். திரிலோகநாதனால் வழங்கப்பட்டன.

மேற்படி பிரதேச சபைத் தலைவர் எடுத்தமுயற்சியின் பேரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடியிருப் புகள் அமைப்பதற்கென இவை வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஏற்கனவே இம் மக்களுக்கு வேண்டிய உடனடி நிவாரணங்களை சம்பந்தப்பட்ட பிரதேசசபை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட இடத்திற்கு, பிரதேசசபைத் தலைவரின் செயலாளர் ம. ஜெகஜெயன் மற்றும் தொழிலநுட்ப உத்தியோகத்தர். ஞானேந்திரன், மா. புலேந்திரன் ஆகியோர் உடன் சென்றிருந்தனர். (உ-3)

# விமானப் படை சாதனை?

(வவுனியா)

இலங்கை விமானப் படையினர். 1985 ஆம் ஆண்டு தொட்டு இற்றைவரையான காலப்பகுதியில் 45வான் கலங்களைத் தமது தாக்குதல்களால் இழந்திருப்பதாகவிடுதலைப் புலிகள் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

இவை முதலாம் இரண்டாம், மூன்றாம் கட்ட ஈழப் போர்களின் போது இழக்கப் பட்டுள்ளன.

இதேசமயம். இலங்கை விமானப் படையின் பொன் விழாக் கொண்டாட்டங்கள் அண்மையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டமை தெரிந்ததே. (உ-4)

# இளைஞர் யுவதிகளுக்கு சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு சிங்கப்பூரில் அதிக வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான திட்டமொன்றைவெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டம் தொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துடன் பேச்சுக்களை நடத்துவதற்காக சிங்கப்பூரில் உள்ள வேலைவாய்ப்பு முகவர்கள் அமைப்பின் 25பிரதி நிதிகளைக் கொண்ட குழுவொன்று எதிர்வரும் இருபதாம் திகதி இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் எரிக்றொகிடீன் கூறியுள்ளார். (உ 4)

# நாரிப்பிடிப்பு நோயாளிக்கு மலேரியா பரிசோதனை

[யாழ்ப்பாணம்]

நாரிப்பிடிப்பு நோயாளிக்கு மலேரியாப்பரிசோதனை மேற்கொண்ட நகைப்பிற்கிடமான சம்பவம் அண்மையில் அரசினர் வைத்தியசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

நாரிப்பிடிப்பு நோயால் மிகுந்த அவஸ்தைப்பட்ட ஒருவர் சிகிச்சை பெறும் பொருட்டு அங்கு சென்றார்.

நோயாளியைப்பரிசோதித்த வைத்தியர் இரத்தப்பரிசோதனைக்குச் சிபார்சு செய்தார்.

மணிக்கணக்காய் நாரிப்பிடிப்புடன் காத்திருந்த நோயாளி இரத்தப்பரிசோதனை அறிக்கையைப் வாங்கிப்பார்த்தபோது, மலேரியா இல்லை என்ற குறிப்பு காணப்பட்டதாம். [உ]

# காந்தீய மன்றம் ச.ச. நிலையப் பகுதியில் கசிப்பு உற்பத்தி ஒழிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதிகாந்தீய மன்றசனசமூக நிலையநிர்வாகிகளின் அயராதமுயற்சியின் பேரில் அச் சனசமூக நிலைய சுற்றயல் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது.

முன்னைய காலங்களில் இப்பகுதியில் பெருகியிருந்த விற்பனை மற்றும் உற்பத்தியை காந்தீய மன்ற சனசமூக நிலையநிர்வாகிகளுடன் அவ்வூர் மக்களும் ஒன்றிணைந்து முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

# படையினரால் கூட்டிச் செல்லப்பட்ட மூவர் வீடு திரும்பவில்லை

[யாழ்ப்பாணம்]

வரணி, தாவளை, இயற்றாலைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட உறவினர்களான மூன்று இளைஞர்களும் இதுவரை வடுவிககப்படவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

தோட்ட வேலைகளில் ஈடுபட்டிருந்த வேளை மேற்படி இடததைச் சேர்ந்த தங்கராசாமகேஸ்வரன்[வயது21], கந்தசாமிஸ்ரீகாந்தன் [வயது-24], நவரத்தினராசா ஜெயராசா (வயது 24) ஆகியோரே படையினரால் அழைத்துச் செல்லப்பட்டவர்களாவர் இச்சமபவம தொடர்பாக இந்த இளைஞர்களின் உறவினர்கள மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்திலும் முறையிட்டுளளனர். (உ 10)

# வீதி சீரில்லை

[யாழ்ப்பாணம]

வண்ணார்பண்ணை பிரப்பங்குள வீதி நீண்ட காலமாக திருத்தஞ் செய்யப்படாது குன்றுங் குழியுமாக காணப்படுகறது.

இதனால் இவ் வீதியால் பயணஞ்செய்வோர் பெருஞ்சிரமங்களுக்கு உளளாகுவதாகவும், சம்பந்தப்பட்டோர் இவ் வீதி திருத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளாதது பற்றியும் பொது மக்கள மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (செ)

# பிரிட்டன் பிரதமருக்கு பத்திரிகைகள் புகழாரம்

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயருக்கு அண்மைக்காலமாக பிரபல பத்திரிகைகள் பலவும் புகழ்மாலை சூடி வருவதால் பிளேயருக்கு நடைபெறஇருக்கும் தேர்தலில் அதிஷ்டம் கிட்டவாய்ப்புள்ளது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிரிட்டனில் பிரதான பத்திரிகைகளான 'சன்' முதல் பினான்ஷியல் டைம்ஸ் வரை பிளேயருக்குபுகழாரம் சூட்டி வருகின்றன.

'ரொனி' இதுநல்ல தருணம் தேர்தலை நடத்துங்கள் என்று சன் பத்திரிகை தலைப்புச் செய்தியுடன் தகவல் வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்தின் தேர்தல் எதிர்வரும் மே மாதமளவில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-9)

# நிர்வகிக்க நிதி வசதி போதாது

# மிர் விண்கலத்தை அழித்துவிட முடிவு

(மொஸ்கோ)

அந்தரத்தில் மிதந்து கொண்டிருக்கும் ரஷ்யாவின் மிர் விண்கலத்தை மேலும் நிர்வகிக்க போதுமான நிதி வசதியின்மையால் அதனை அழித்துவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் இம் முயற்சியால் விண்ணில் இருந்து பூமியை நோக்கி வரும் இந்த விண்கலம் காற்று மண்டல உராய்வு காரணமாக சிதைந்து அதன் பாகங்கள் பூமியின் தென்பகுதிக் கடற்பரப்பில் நியூசிலாந்துக்கு கிழக்கே மூவாயிரம் கி.மீ. தொலைவில்விழும் என விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம்,

விண்ணில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் நீண்ட நாட்கள் தங்கியிருந்த வீரர்கள், டிஸ்கவரி விண்கலம் மூலம் பூமிக்கு திரும்புகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

# ஸ்டாலின் மீது ஊழல் குற்றம் விசாரணை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(சென்னை)

வருமானத்திற்குப் புறம்பாக சொத்துச் சேர்த்தது தொடர்பான வழக்கில் சென்னை மாநகராட்சி மேயர் ஸ்டாலின் மீதான விசாரணைகளின் அறிக்கை சென்னை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்டாலின் வருமானத்திற்கு அதிகமாக சொத்துச் சேர்த்துள்ளார் என்று அ.இ.அ.தி.மு. கவைச் சேர்ந்த செண்பகமூர்த்தி சென்னை நீதிமன்றத்தில் புகார் கொடுத்ததை அடுத்தே இவர்மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இதற்கான நீதிமன்ற விசாரணைகள் நேற்று ஆரம்பமாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## செய்திப்பரல்

* மெக்ஸிக்கோ வின்ஸபாடிஸ்டா விடுதலை இராணுவத்தினர் அரசுடனான நிபந்தனையுடன் கூடிய பேச்சுக்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.
* இந்தோனேஷியாவில் குழப்பங்களை ஏற்படுத்திவரும் ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.
* கொலம்பியாவின்இடதுசாரி கெரில்லாத் தலைவர் மாலாண்டா 25 நாடுகளின் இராஜதந்திரிகளைச் சந்தித்துள்ளார்.
* இஸ்ரேலில் பதவியேற்றிருக்கும் புதிய பிரதமர் ஏரியல் ஷரோனுக்கு பலஸ்தீன தலைவர் யஸிர்அரபாத்வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். (உ-9)

# சேர்பியாவில் நிலவிய அமைதிக்கு வேட்டு

(ஸ்கோப்)

சேர்பியாவில் அல்பேனியப் போராளிகள் கடந்த சனிக்கிழமையன்று ஒரு சேர்பியப் பொலிஸாரைச் சுட்டுக் கொன்றதுடன் 6 பொதுமக்களை காயப்படுத்தியுள்ளனர்.

கடந்தஒரு வருட காலமாக அமைதி நிலவிவந்த அப்பிரதேசத்தில் மீண்டும் கடந்த சனியன்று தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளது எனதெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

# சமாதானப்பேச்சு தற்காலிக இடைநிறுத்தம்

[பொஹோரா]

கொலம்பியாவின் இரண்டாவது பெரிய இடதுசாரி கெரில்லா அமைப்பான தேசிய விடுதலை அமைப்பு இராணுவம், அரசுடனான சமாதானப்பேச்சை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

ஒருமாதத்திற்குமுன் மேற்கொள்ளப்பட்ட இராணுவ முற்றுகை தொடர்பாக எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே சமாதானப் பேச்சு வார்த்தையை, தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது என கத்தோலிக்க மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசிற்கும் கெரில்லா இயக்கத்திற்கும் இடையில் கத்தோலிக்க மதகுருமார்கள் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-7]

# பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் மரணம் திட்டமிடப்பட்ட சதியா?

(லண்டன்)

மறைந்த பிரிட்டிஷ் இளவரசி டயானாவை விபத்து நடந்து 10 நிமிடத்திற்குள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் காப்பாற்றி இருக்கலாம் என்று டயானாவின் நண்பரும் சத்திரசிகிச்சை நிபுணருமான கிறிஸ்டியன் பேனாட் தான் எழுதியுள்ள இதய ஆரோக்கியத்திற்கான 50 வழிகள் என்ற நூலில் தெரிவித்துள்ளார்.

டயான விபத்துக்குள்ளான சமயம் அவருக்கு போதிய வைத்தியம் செய்யப்படவில்லை என சர்ச்சை எழுந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. [உ-9]

## விடுதலைச் சிறுத்தைகள் அணி

# தி.மு.க. வுடன்சேராதிருக்க ஐந்து கோடி பேரம்

(சென்னை)

தி.மு.க. வுடன் கூட்டுச் சேராமல் இருப்பதற்காக தமக்கு ஐந்து கோடி தர எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு செல்வந்தர் முன்வந்தார் என்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் தேரிவித்துள்ளார்.

செய்தியாளர்களுக்களித்த பேட்டி ஒன்றில் இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, தி.மு.க.வுடன் சேராமல் இருக்க எமக்கு ஐந்து கோடி பணம் தரமுன்வந்த போதும் அதனை நிராகரித்தே நாம் தி.மு.க. அணியில் இணைந்துள்ளோம்.

கலைஞர் மு. கருணாநிதி உங்கள் கட்சியை ஒடுக்கி விடுவார் என்று தா.ம. கவினர்இரகசியமாகஎச்சரித்த போதும் நாம் தற்போது தி.மு.கவுடன் இணைந்துள்ளோம் என்றார். (உ-9)

## பலஸ்தீனர்களுக்கு

# இராணுவ ரீதியில் உதவி வழங்க ஈராக் அதிபர் சதாம் இணக்கம்

(ஜெருசலேம்)

பலஸ்தீனர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் இஸ்ரேலியர்களுக் கெதிரான போராட்டத்தில் பலஸ்தீனர்களுக்கு இராணுவ ரீதியாக உதவப்போவதாக ஈராக் அறிவித்துள்ளது.

பலஸ்தீனியர்களுடன் இணைந்து பங்கேற்பதற்காக ஆயிரக்கணக்கான ஈராக்கியருக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தை ஈராக் கடந்த சனியன்று ஆரம்பித்துள்ளதாக ஈராக்கிய செய்தி நிறுவனமான ஐ.என்.எ தெரிவித்துள்ளது.

சியோனிஸ்ட்களின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடுவதற்காக பலஸ்தீனியர்கள் மேற்கொள்ளும் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி சதாம் விடுத்த வேண்டுகோளை ஏற்று பலர் முன் வந்துள்ளதாகவும் அவர்களில் ஒருபகுதியினருக்கு முதற் கட்டமாக கடந்த சனியன்று பயிற்சிகள் ஆரம்பமாகியிருப்பதாகவும் ஈராக் செய்திகள் தெரிவித்துள்ளன. (உ-9)

# த.மா.கா தலைவர் மீது வை. கோ. சாடல்

## முன்னுக்குப்பின் முரணாக பேசுகின்றாராம்

(சென்னை)

1996 ஆம் ஆண்டுத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.கவுடன் காங்கிரஸ் செய்து கொண்ட உடன்பாட்டை எதிர்த்து போர்க்கொடி தூக்கிய த.மா.கா. தலைவர் மூப்பனார் தற்போது மட்டும் எவ்வாறு அ.இ.அ.தி.மு.கவுடன் பேரம்பேச முன்வந்துள்ளார் என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வை. கோபாலசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

1996 ஆம் ஆண்டுப் பகுதியில் அ.இ.அ.தி.மு.கவின் ஆட்சி ஊழல் நிறைந்தது எனவும் இந்தியாவின் உதவாக்கரைக் கட்சி என்றும் வர்ணித்து எதிர்ப்புத் தெரிவித்த மூப்பனார் தற்போது ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர காரணம் என்ன ஊழல் நேர்மையாகிவிட்டதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார். (உ-9)

## புத்தர் சிலை உடைப்பு

# சமயத் தலைவர்கள் இணங்கினால் கைவிட தயாரென தலிபான் அறிவிப்பு

(காபூல்)

## உலக தரிசனம்

முஸ்லிம் அமைப்பான இஸ்லாமியமாநாட்டுத்தூதுக்குழுவும் ஆப்கானிஸ்தானின் சமயத்தலைவர்களும் முழுமனதுடன் ஏற்றுக் கொள்வார்களானால் புராதன புத்தர் சிலை தகர்ப்பு நடவடிக்கைகளை கைவிடுவதாக தலிபான்இயக்கம் தெரிவித்துள்ளது.

சிலைகளை தகர்ப்பது முறையற்றது எனக்கோரி இருதரப்பினரும் இஸ்லாமிய அறிக்கை ஒன்றை வெளியிடுவார்களேயானால் அதனை ஏற்றுக்கொண்டு இந்த நடவடிக்கைகளை கைவிடுவதாக பாகிஸ்தானுக்கான தலிபான் அமைப்பு தூதுவர் முல்லா அப்துல்லா சராம் சார்பிதெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலைகளை தகர்க்கவேண்டாமென்று ஆளும் தலிபான் அமைப்புடன் இஸ்லாமிய மாநாட்டு தூதுக்குழுவின் முக்கிய பிரமுகர்களுடன் பேச்சை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# பிள்ளைகளை கூலிக்கு அனுப்பிய குடும்பத்தலைவர்களுக்குதண்டனை

## துருக்கி நீதிமன்று வழங்கியது

(இஸ்தான்புல்)

தமது பிள்ளைகளை குடும்ப வருமானத்திற்காக வேலைக்கனுப்பிய 21 குடும்பத் தலைவர்களுக்கு துருக்கி நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

3 மாத சிறைத் தண்டனையின் பின்னர் இக்குற்றவாளிகளிடம் இருந்து 162 டொலர் குற்றப்பணமாக அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் ஆறுமுதல் பதினேழு வயதிற்கிடைப்பட்ட பத்து இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் தொழிலிற்குச் செல்ல நிர்பந்திக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-9]

## போர் நிறுத்த அறிவிப்பின்பின்

# காஷ்மீரில் ஊடுருவல் சம்பவங்கள் குறைவாம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் மத்திய அரசு போர் நிறுத்த அறிவிப்பைச் செய்தபின்னர் அப்பகுதியில் ஊடுருவல் காரர்களின் அத்துமீறல் குறைந்துள்ளது என்று இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ச் பெனாண்டஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நாடாளுமன்றில் உரையாற்றுகையில் நவம்பர்27 இற்கு முன்புள்ள 3 மாத காலத்தில் .54முறை தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர்.

ஆனால் போர் நிறுத்த அறிவிப்பின் பின்னதாக 15 முறை மாத்திரமே ஊடுருவியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். (உ-9)

சூழும் ்டியும் ஒரு ங்கிழக்கும் கோல் கோடிச்
சூழாது செய்யும் அரசு
-குறள்-

# வலம்புரி

## வடலிப் பனைகள்

யாழ்ப்பாண மாநகர சபையில் கடந்த ஒரு சில மாதங்களாகஇராஜஆட்சி நடக்கிறது. பெண் ஊழியர்கள் மீது விரசமான பேச்சு, பழி வாங்கல், சம்பளக் கொடுப்பனவுகள் நிறுத்தம், உள்ளக இடமாற்றம்என்று வெறியாட்டம் நடந்து கொண்டேயிருக்கிறது. தட்டிக் கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டமென்பதுஇப்போது யாழ் மாநகரசபை நிர்வாகத்தைப் பொறுத்த வரை மெத்தச் சரியாகி விட்டது.

தலைமை வகிப்பவர் தகுதியற்றவரென்றால்-தன் உழைப்பே முக்கியமென்று கொழும்பில் சுக போகம் அனுபவித்தால் நிலைமை இப்படித்தான் இருக்குமென்பதை இப்போதாவது யாழ். நகர மக்கள் புரிந்து கொண்டிருப்பர்.

யாழ்ப்பாண மாநகர சபை ஊழியர்கள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு முதன்மையானவர் இல்லை. தொலை பேசியில் கூடத் தொடர்பு கொள்ள முடியாது. அத்தகையவர்கள் சட்டவாத உழைப்பில் சுவை கண்டு கொழும்பிலேயே தங்கியுள்ளனர்.

தமது உழைப்பு தடைப்படாமல் இருப்பதற்காக தமது கட்சிக்கு ஆதரவான ஒருவரை ஆணையிடும் கதிரையில்அமர்த்தி விட்டனர். அவரோ அர்த்த சாமத்திலும் குடை பிடிக்கிறார். கடிதம் அனுப்புகிறார் என்ன செய்வது யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையிடும் கதிரையில் எத்தனை அற்புதமான மனிதர்கள் இருந்தார்கள். ஆனால் இன்று ஆதி மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு முந்திய வடிவங்கள். என்ன செய்வது, வடலிப் பனையைக் கொண்டு வந்து முழுப் பனையாக்கினால் அடிப்பனையில் இருக்கும் காரை முள்ளும் கனக்கக் கதைக்கவே செய்யும்.

எதற்கும் காலதாமதமின்றி பெண் ஊழியர்கள் மீது விரசமான பேச்சுக் குறித்தும், பழி வாங்கல், மற்றும் சம்பள இடை நிறுத்தம் ஆகியன குறித்தும் உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், கறுப்புப் பட்டிக்கு விசாரணையென்றால் கால்,அரை அடித்து விட்டு சபைக் கூட்டத்திற்கு வருவோர் மீது என்னையா நடவடிக்கையென்றும் கேட்பதற்காக அனைவரும் ஒன்று திரள்வது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைக் கழகத்தின் அபரிமித வளர்ச்சி

கடிகார முட்கள் நண்பகல் 12 மணியை அண்மித்துக் கொண்டிருந்தன. பகலவனின் கதிர்க்கரங்கள் மிகத் தீவிரமாக புவியின் மேற்பரப்பில் வேரூன்றி இருந்தான். நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளை கைக்குட்டையால் துடைத்தபடி இராமநாதன் நுண்கலைக் கழக வாயிலை அடைகிறேன் வாயிலில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தவரிடம் அனுமதியைப் பெற்றுக்கொண்டு அவ்விசைத் துறைக்குள் நுழைந்த என் கண்கள் அந்த நபரைத் தேடியது. அங்கே வண்ணச்சேலைகளிலான சோலைகளின் அணிவகுப்பை உண்மையிலே கண்டு பிரமித்துப் போனேன். ''எப்படி இங்கே மட்டும் மொத்த அழகு கொட்டிக் கிடக்கிறது'' எனக்குள்ளே கேள்வியைக் கேட்டபடியே இசைத்துறைத் தலைவரின் அலுவலகத்தினுள் நுழைகிறேன். அங்கே அவர் என்னை வரவேற்ற விதமே அலாதியானது. இப்படி அவர் ஒரு எளிமையான மனிதரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அங்கே அவரிடம் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு சில முக்கிய அத்துறை பற்றிய விடயங்கள் பற்றி கலந்துரையாட விளைகிறேன். அதன் தொகுப்பு இங்கே தரப்படுகிறது.

● இசைத்துறைத் தலைவராகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இராமநாதன் நுண்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, இலங்கையிலேயே மிக முக்கியமான நிறுவனமாக குறிப்பிட்டுக் கூறப்படுகிறது. அந்த வகையில் எமது சமுதாய மக்கள் இத்துறையின் வளர்ச்சி, மற்றும் சமுதாய பங்குகள், இசை வளர்ச்சி போன்றவற்றை அறிய மிக மிக ஆவலாயுள்ளார்கள். அந்த வகையில் முதலில் தங்களைப் பற்றிய இசையின் சாதனைகளை எமக்கறியத் தருவதோடு இத்துறையின் தலைவராக வருவதற்கு முன்னர் உள்ள உங்கள் நிலைமை என்னவாக இருந்தது என்பதை சிறிது கூறுவீர்களா?

□ நான் 1-வது சிரேஷ்ட விரிவுரையாளராக இந்த துறையில் பணியாற்றி வருகிறேன். இலங்கையில் முதலாவதாக இந்த இசையின் முதுதத்துவமாணி பட்டத்தினை ஆய்வின் மூலம் இந்திய இலங்கை அறிஞரின் மேற்பார்வையின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டேன். அத்துடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1ம் தர சங்கீத பட்டமும், திருப்பனந்தாள் தமிழிசைக் கல்லூரியின் 1ம் தர இசைப்பட்டமும், இலங்கை ஆசிரிய பயிற்சிக் கல்வி நிறுவனத்தின் 1ம் தர டிப்ளோமா பட்டமும் பெற்று இருக்கிறேன். இந்தியா இலங்கை உட்பட, பல கௌரவ விருதுகளை (15க்கு மேற்பட்ட) பெற்றிருக்கின்றேன். இலங்கை உயர்கல்வி அமைச்சும, இந்து கலாசார அமைச்சும் இணைந்து எனது ஆற்றுகை திறமைக்காகவும், சமூகப் பங்களிப்புக்காகவும், 'ஞான சிரோன்மணி' என்ற விருதை (1992) இசையில் முதன் முதலாக எனக்களித்து கௌரவித்தனர். கடந்த ஆண்டு, இலங்கையிலுள்ள தலை சிறந்த கலைஞர் மூவருக்கு ''அகில லெங்கை சமாதான நீதவான்'' பதவி வழங்கப் பட்டது. அவர்களில் இருவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள். ஒருவர் (ந. வி. மு. நவரத்தினம்) நான், மற்றையவர் மகா வித்துவான் பிரம்மஸ்ரீ. வீரமணி ஐயர் இந்த சமூக மட்டங்களிலிருந்து இன்று வரை பல்வேறு பாராட்டுக்கள் வந்த வண்ணமுள்ளன.

● இந்திய பல்கலைக்கழகம் ஒன்றில் இசைத்துறைத் தலைவர் எந்தளவு தகுதியோடும், தமது துறை சார்ந்த இசை நிபுணத்துவத்துடனும் பணிபுரிகின்றாரோ, அந்தஇரண்டு வகையிலும் மிகவுப் பொருத்தமான தலைமைப் பதவியை வகிக்கும் தாங்கள் ''இசைத் துறை'' சார்ந்த வளர்ச்சியைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினால். வெளியுலக சமூகத்தினரும் அறிந்து கொளள ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்?

□ எமது இசைத்துறை இராமநாதன் நுண்கலைக்கழகம் என்ற பெயரில் பல்வேறுபட்ட பரிணாம வளர்ச்சியை இன்று வரை யாழ்பாணப் பல்கலைக் கழகத்தின் கீழ் கண்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு, இன்று துணைவேந்தராக இருக்கிற பெருமைக்குரிய பேராசிரியர் பொன் பால சுந்தரம்பிள்ளை கலைப்பீடாதிபதியாக இருந்த காலத்தில் இங்கு பணியாற்றிய எண்மருக்கு நிரந்தர விரிவுரையாளர் பதவிகள் வழங்கப்பட்டன. இதற்கு முன்னோடியாக இராமநாதன் நுண்கலைக்கழக ஆசிரிய சங்கத்தினூடாக நாம் நடவடிக்கை எடுத்திருந்தோம். எமது இடைவிடாத வேண்டுகோளை அவர்கள் நன்கு பரிசீலித்து பல புதிய திட்டங்களை முன்னெடுத்தார்கள். அவற்றை ஆசிரிய சங்கமூடாகச் செயலாளர் என்ற முறையில் நான் வரைவு செய்து கேட்டிருந்தேன். இன்று அத்திட்டங்களில்,

★ ஆசிரிய பதவிஉயர்வு
★ ஆசிரிய உயர் பட்டக் கல்வி வாய்ப்பு
★ மாணவர்க்குப் பட்டம் வழங்கல்
★ டிப்ளோமா மாணவரை உள்வாங்கிஅவர்க்கும்பட்டம் வழங்கல்

வருகின்றேன் ஆசிரிய வான்மைவிருத்தியைபொறுத்தவரை இந் நடவடிக்கைகள் எதிர் காலத்தில் சிறந்த பல விளைவுகளை இந்நாட்டிற்களிக்கும்.

அடுத்து 1994ஆம் ஆண்டிலிருந்து நாம் அனுமதிக்கும் மாணவர் அனைவரும் (B.F.A மாணவர்களாக) நிறைந்த அதிர்ஷ்ட சலிகளாக உள்வாங்கப்படுகின்றனர்.

எம்மால் பயிற்றுவிக்கப்பட்ட பட்டத்துறை மாணவ அணியைச் சேர்ந்தவர்கள் கடந்த ஆண்டு நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடற்பாலது.

இந்த கல்வியாண்டு (2000-2001) எமது கற்கை நெறியில் புதிய மாற்றங்களை உருவாக்கியுள்ளோம். இம்மாற்றம் semester கல்வித் திட்டமூடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, இதுவரை கடந்த 25 ஆண்டுகளாக இசைத்துறையிலுள்ள பாரிய குறைபாடு அடியோடு நீக்கப்பட்டுள்ளது; சான்றாகக் கூறுவதானால், மிருதங்கம் அல்லது வீணைத்துறையில் பட்டக் கல்விபயிலும் மாணவர் ஒருவர் இப்புதிய திட்டம் மூலம், சிறந்த பாடகராகவும், சிறந்த வீணை வித்துவானாகவும, சிறந்த வயலின வித்துவானாகவும், சிறந்த நடன வித்துவானாகவும், சிறநத ஆங்கிலப் புலமையானவனாகவும் உருவாகுவர். இந்நிலை எமது நுண்கலைக் கல்வித் திட்டததில் பாரிய சிறப்புக்களை அளிப்பதற்குக் கருவாக அமைந்துள்ளது அந்த வகையில் இதறுறையின் வளர்ச்சி நாளுககு நாள் பல எதிர் பார்பபுககளை, நவீனமாற்றங்களை உள்வாங்கிச் செல்வதற்குஎமக்குப பெருந் துணையாக நின்று கை கொடுப்பவரை இந்நாடு என்றும் போற்றும், இந்நூற்றாண்டு தரிசிக்கின்ற கலவி நவீனத்துவ சிற்பி, மதிப்பார்ந்த துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை என்பதை இங்கு கூறி வைப்பதில் புளகாங்கிதமடைகிறேன். இப்படிப்பட்ட ஒரு பெரும் கர்மயோகியைக், கல்விசாணக்கியரை நாம் பெரும் துணையாகப் பெற்றிருப்பதை யாழ்ப்பாண சமுதாயம் என்றும் போற்றும் என்பது உண்மை.


### இசைத் துறைத் தலைவர்:
## ந. வி. மு. நவரத்தினம்
### பேட்டி கண்டவர்: கே.வி. சசிகுமார்

★ இசை, நடனத்துறைகள் தனித்தனித்துறைகளாக்கப் பட்டமை
★ நாம் கோரிய சித்திர வடிவமைப்பு, பட்ட கற்கை நெறிஆரம்பிக்கப்பட்டன
★ மாணவர்களுக்கான பாரிய விடுதிகள் இரண்டு அமைக்கப்பட்டன.
★ புதிய கட்டடத் தொகுதியின் 1வது பணி பல்கலைக்கழக வெள்ளி விழாவில் திறந்து வைக்கப்பட்டது.

போன்ற பல புதிய நெறி முறைகள் பன் முகப்படுத்தப்பட்டு, செயலுருவாக்கம் பெற்று நிறைவேறி உள்ளமை எமது கல்வி வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும், எமது நிரந்தர விரிவுரையாளரில் அறுவரில் இசை நடனத்துறையை சேர்ந்த நிரந்தர உறுப்பினரில் 4 பேர் ஏற்கனவே பட்ட மேல் ஆய்வைப் பூர்த்தி செய்து, துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராக உயர்ந்துள்ளனர். ஏனைய இருவரும் மிக விரைவில் அதனை எய்துவதற்கு தயார் நிலையிலுள்ளனர். அத்துடன், கலாநிதிப் பட்ட ஆய்வினைத் தற்சமயம் நான் வேகமாகப் புரிந்து வருகின்றேன்

## தவக்காலச் சிந்தனை - 15



''எது எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை.நான் முதலிடம் பெற வேண்டும்! என்ன விலை கொடுத்தாவது நான் சிறப்பிடம் பெற வேண்டும்!'' உலகின் இந்த இழிவான போக்கிற்கு ஈடு கொடுக்காது துணிந்து நிற்கும் மனிதரை இன்று சமூகத்தில், திருச்சபையில் காண்பது அரிதான காட்சியாகி விட்டது. ''தான்'' என்ற அகந்தையும், ''தனக்குத் தான்'' என்ற சுயநலமும் கடவுளின் பார்வையில் எரிந்துபோகும் இழிநிலைகளாகும். இயேசுவின் தலைமையில் இறையரசுக்குள் வர நினைப்பவர் நிச்சயமாக இத்தகைய இழி குணங்களிலிருந்து விடுபடவே வேண்டும். இறையரசின் மக்களுக்குரிய முதல் பண்பு தொண்டராகவும், பணியாளராகவும் நம்மை பிறரின் நலனுக்காக கையளிக்கத் தயாராகும் பண்பாகும். இதுவே தலைமைப் பண்புகளில் உயர்வானதாகும். ''எல்லோரும் எனக்கு பணி புரிவதற்காக'' எனும் மனநிலை மாறி ''எல்லோருக்கும் துணையாகிப் பணிபுரிய பிறர் வாழ என்னுயிர் ஈவேன்'' எனும் உயர்நிலை அடைந்தோரே இயேசுவின் சீடராகவும், இறையரசின் உறுப்பினராவும் திகழ முடியும்.

காவலன்

# நேரடி விவாதத்திற்கு வருமாறுஐ.தே.க அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகை அமைப்பது குறித்து நேரடி விவாதத்திற்கு வருமாறு ஐ.தே. கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

ஜனாதிபதி மாளிகை அமைப்பது தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீர தொலைக்காட்சி பேட்டியில் தெரிவித்த தகவல்களும், தரவுகளும் முரண்பட்டவையாகவும் மூடிமறைக்கப்பட்டவையாகவுமே உளளது.

இவ்விவகாரம் தொடர்பாக நேரடி தொலைக்காட்சி விவாதம் ஒன்றுக்கு வருமாறு ஐ.தே. கட்சி சவால் விடுத்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனாதிபதி மாளிகை அமைக்கப்படுவதாக கூறும் காரணம் தவறானது.

கடந்த காலங்களில் ஜனாதிபதி மாளிகையிலேயோ அமைச்சு அலுவலகங்களிலேயோ சொந்த வீடுகளிலேயோ எவரும வன்முறையாளர்களால் கொல்லப்படவில்லை. நடு வீதிகளிலும் பொது மேடைகளிலுமே கொல்லப்பட்டனர்.

மக்களைத் தவறான திசைகளுக்கு இட்டுச்செல்ல வே அரசு முயறசிக்கிறது. என்று ஐ.தே. கடசி மேலும் குற்றம் சாட்டியுள்ளது. (செ)

எண்ணம்போல வண்ண நகைகளை மங்கையர் மனங்குளிர செய்து பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

**74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.**

[கி-1575]

# வவுனியா நலன்புரிநிலையத்திலிருந்த 160 பேர் நேற்று யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரிநிலையத்தில் தங்கியிருந்த 93 குடும்பங்களை சேர்ந்த 160 பேர், நேற்று கப்பல் மூலம் திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் அனைவரும் தெல்லிப்பழையிலுள்ள நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டு, பின்னர் அவர்களது சொந்த இடங்களுக்குச்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தெல்லிப்பழையில் தங்கியிருந்த போது இவர்களை, ஈ.பி.டி.பி யின் யாழ்மாவட்ட உதவி அமைப்பாளர் கே.நிசாந்தனின் தலைமையிலான குழு, அங்கு சென்று பார்வையிட்டு, தேவைகளைக் கேட்டறிந்ததுடன் மதிய, இரவு உணவுகளையும் அவர்களுக்கு வழங்கியது.

ரான் அமைப்பின் நிதி உதவி மூலம், மேற்படி குடும்பங்கள் தங்களது சொந்த இடங்களுக்குச் செல்ல போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. [இ]

அழகிற்கு அழகூட்டும் தங்க நகைகளை உடனுக்குடன் செய்து தருபவர்கள்

**நியூ ராதிகாஸ் நகைமாளிகை**

**189. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

(கி/ 1576)

## சிங்கள-..

வாக்குவாதத்தையடுத்து பெரும் தடியடியுடன் கூடிய மோதல் இடம்பெற்றுள்ளது. இதன்போது எட்டு மாணவர்கள் காயமடைந்ததுடன் விடுதி மேற்பார்வையாளரும் தாக்கப்பட்டார்.

இச்சம்பவத்தை அடுத்து கல்வியியல் கல்லூரி நிர்வாகமும், வவுனியா பொலிசாரும் சமரசமாகத் தீர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதும் பலனெதுவும் கிடைக்கவில்லை.

எனினும் தமிழ் மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு வகுப்புகளுக்குச் செல்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஆனால் சிங்கள மாணவர்கள் தமது உயிருக்கு உத்தரவாதம் அளித்தால் மட்டுமே பகிஷ்கரிப்பைக் கைவிட்டு வகுப்புகளுக்குச் செல்வோம் எனத் தெரிவித்தனர்.

இதனை அடுத்து பொலிசார் இந்நாட்டின் மாணவர்கள் எவருக்கும் தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு அளிக்கப்படமாட்டாதுஎன்று தெரிவித்தனர்.

ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செலலப்பட்ட இரண்டு தமிழ் மாணவர்களையும் வவுனியாவுக்கு திரும்பவும் அழைத்து வருமாறு தமிழ் மாணவர்கள் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

இக் கல்லூரியில் சுமார் 500 க்கு மேற்பட்ட தமிழ் மாணவர்களும், 125 சிங்கள மாணவர்களும் கல்வி கற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## பொலிஸ்...

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் அப்துல் நஸார் தப்பிச் சென்று வெளிநாடொன்றில் வசிப்பதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது நீதிமன்றில் ஆஜரான புலனாய்வுத்துறைப் பொலிஸ் அதிகாரி செம்மணி புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் யாருடையவை என்பதைக் கண்டறிய அவ்வெலும்புக் கூடுகளின் உறவினர்களின் இரத்த மாதிரியை டீ என்.ஏ மரபணுப் பரிசோதனைக்காக வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும்;

ஆனால் அதற்குரிய நிதி பாதுகாப்பு அமைச்சினால் இன்னமும் வழங்கப்படவில்லை, நிதி கிடைத்தால் மட்டுமே இரத்த மாதிரிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும் என்று நீதவானிடம் தெரிவித்தார்.

வழக்கு விசாரணைகள் மே மாதம் 15ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் நீதிமன்றில் நடைபெற்ற செம்மணி புதைகுழி வழக்கு பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்புக்கு மாற்றப்பட்டமை தெரிந்ததே. (இ-4)

## 26கு-ந உதவி- -

மூலம் தொடர்பு கொண்டு கேட்டபோது ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமை குறித்தும் அதனால் சிகிச்சை நிலையங்கள் ஸ்தம்பிக்கும் அபாயநிலை குறித்தும் தான் முதல்வருக்கு ''பக்ஸ்,, செய்தி மூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை இன்று வண்ணார்பண்ணையில் இடம் பெறும்சிகிச்சைநிலையம் முற்றாக இயங்காதெனவும், மகப்பேற்று நிலையங்களும்அவசர சிகிச்சைகளுமே இயங்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுஇவ்வாறிருக்கக றுப்புப்பட்டிப் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் பல்வேறு வழிகளாலும் பழிவாங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ந]

## தமிழர்களுக்குத்...

யிருக்கும் ஜனதிபதி அங்கு வர்த்தகர்கள் மத்தியில் உரையாற்றுகையில்;

நாடு பிரிந்து போவதை ாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் தமிழர்களுக்கு தனிநாடு வழங்குவதென்ற பேச்சுக்கு இடமேயில்லை;

சமாதானம் ஏற்பட எம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோமென்றும் தெரிவித்த அவர்;

விடுதலைப் புலிகள் ஜேர்மனில் நிதிசேகரிப்பில் ஈடுபடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி அரசிடம் கோரப் போவதாகவும் தெரிவித்தார். (இ)

## தொலைபேசி . . .

போது தற்போது தொலைபேசிப் பாவனைகள் அதிகரித்துள்ளதாகவும், இதற்கேற்ப தொலைபேசி மார்க்கங்கள் போதாதிருப்பதாகவும், தொலைபேசி மார்க்கங்களை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் ரெலிக்கொம் நிறுவனம் ஈடுபட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை 180 மீற்றர் உயரமான கோபுரம் அமைக்கும் வேலைகள் இன்னமும் மூன்றுவாரத்தில்முடிந்துவிடும் என்றும் அதற்குரிய முக்கிய கருவி எடுத்து வரப்பட்டதும் அதன் பயன்பாடு கிடைக்கும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார், [வ]

## தற்கொலைத்---

பகுதியில் வைத்தியா வீதியில் உள்ள வீடொன்றில் இருந்தே தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் அங்கிகளுடனும் ஆயுதங்களுடனும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளைப் பொலிஸ் பகுதியில் இருந்து இது தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து மேலும் பலர் கைதுசெய்யப்படலாம் என்று தெஹிவளை பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இவர்களது கைது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதால் மேலதிக விபரங்கள் எதனையும் வெளியிட முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## டாக்டர்.-

வழமையான கிளினிக்குகளும், வெளி நோயாளர் பிரிவுகளும் இயங்காமையால் யாழ்போதனா வைத்திய சாலை வெறிச்சோடிக் காணப்பட்டது.

இதேவேளை அவசர உயிர் காப்பு சேவைகளில் டாக்டர்கள் ஈடுபட்டிருந்தனர். (ம)

## 400 ரூ.சம்பள...

திபதியுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பதவியை இராஜினா மாச் செய்தால் மாகாண சபை உறுப்பினர்களும் இராஜினா மாச் செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

**ஜீ. ரீ. சற் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட பொதுக் கட்டடத் திறப்புவிழா அழைப்பிதழ்**

இடம்: அராலி வடக்கு, திருமகள் சனசமூக நிலையம்
காலம்: 14-03-2001 புதன்கிழமை மாலை 2.00மணி
தலைவர்: இ. இராசேந்திரம்
பிரதம விருந்தினர்: உயர்திரு. ந. திருலோகநாதன்
தலைவர் வலிகாமம் மேற்கு பிரதேச சபை. ஈ.பி.டி.பி வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர்:

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

இங்ஙனம்
திருமகள் சனசமூக நிலையம்
அராலி வடக்கு.

(கி-1598)

**ஜீ. ரீ. சற். நிறுவனத்தின் கிராமிய வீடமைப்பு உதவித்திட்ட புதிய கட்டடத் திறப்புவிழா**

இடம்: வட்டுக்கோட்டை முதலிகோவிலடி அம்பாள் சனசமூக நிலையம்.
காலம்: 14.03.2001 புதன்கிழமை காலை 10.00மணி
தலைவர்: திரு சி. செல்வராஜா

பிரதம விருந்தினர்கள்

உயர்திரு எச். கல்பாக்
குழுத்தலைவர் (ஜீ.ரீ.சற்)

உயர்திரு ந. திரிலோகநாதன்
(தலைவர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, ஈ.பி.டி.பி வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர்)

உயர்திரு நா. வேதநாயகன்
(பிரதேச செயலர் - சங்கானை)

சிறப்பு விருந்தினர்கள்

திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்
(சமூக ஆற்றுப்படுத்துனர் - ஜீ.ரீ.சற்)

திரு எஸ். நவரட்ணராஜா
(திட்ட இணைப்பாளர் - ஜீ.ரீ.சற்)

திரு எஸ். நாகரத்தினம்
(ஜே/ 165 வட்டு தெற்கு கிராம அலுவலர்)

திட்டப் பயனாளிகள், பொதுமக்கள், மற்றும் ஏனைய அமைப்புகள் அனைவரும் புதிய கட்டடத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு நன்றிகள் பலகூறி வாழ்த்துரைகள் வழங்கி, விருந்தினர்களைக் கௌரவிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அம்பாள் சனசமூக நிலைய நிர்வாகமும்,
வட்டு முதலி கோவிலடி பொதுமக்களும்

(கி/1599)

இணுவில் - மருதனார்மடம்

அருள்வளர்

**ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய கோயில்**

**மண்டலாபிஷேக விஞ்ஞாபனம்**

கிரியா கால விபரம்

**இன்று (14-03-2001) புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 8-00 மணிக்கு | — | விநாயகர் பூசை |
| காலை 8-30 மணிக்கு | — | யாகபூசை, சங்கு பூசை |
| காலை 10-00 மணிக்கு | — | திரவ்ய அபிஷேகம் தொடர்ந்து சங்காபிஷேகம் |
| நண்பகல் 12-00 மணிக்கு | — | விசேஷ பூசை |
| 1-00 மணிக்கு | — | மகேஸ்வர பூசை (அன்னதானம்) |
| பிற்பகல் 2-00 மணிக்கு | — | இன்னிசைக் கச்சேரி சங்கீத பூஷணம் எஸ். குமாரசாமி (பக்கவாத்திய சகிதம்) |
| பிற்பகல் 3-00 மணிக்கு | — | சமயச் சொற்பொழிவு |
| மாலை 4-00 மணிக்கு | — | சீதாராம திருக்கல்யாண வைபவம் நிறைவுற்று வீதியுலா நிகழும். |

அன்பளிப்பு:-

**லாலா சோப் ஸ்தாபனத்தார்**
அச்சுவேலி.

(கி - 1596)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.